**நாகப்பட்டினம் நகராட்சி**

**2019–ம் ஆண்டு நவம்பர் மாதம் 22 –ம் நாள் வெள்ளி கிழமை காலை 11. 00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 22–11–2019 | பொருள் எண்.1<br>சொத்துவரியினை 01–04–2018 முதல் சீராய்வு செய்திட வெளியிடப்பட்ட டஅரசாணை எண்.73–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல்துறை நாள்.19–07–2018 மற்றம் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுஙகல் துறை நாள் 26–07–2018 ஆகியவைகளை நிறுத்தி வைத்து சொத்து வரி சீராயிவிற்கு முந்தைய சொத்துவரியினையே வசூலித்திடவும், சொத்துவரி சீராய்வு குறித்த அரசு செயலாளர் நிதித்துறை அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துறையின் பேரில் அரசினால் சொத்துவரி சீராய்வு குறித்து முடிவு செய்யப்படும் என வெளியிடப்பட்ட அரசாணை எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (MA-IV) துறை நாள்.19–11–2019 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண்.148<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 1 — பதிவு செய்யலாம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20–11–2019–ம் தேதிய சுற்றறிகை ந.க..40032/.2012/.ஆர்–ல் குறிப்பிட்டவாறு சொத்துவரி மண்டலஙகள் பகுப்பாய்வு ( Zone rate ) மற்றம் 2017–18ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு அளவீடுகள் (Under Assessed and Buildings with changes in usage ) ஆகியவைகளையும் நிறுத்தி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதைம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | |
| | ந.க.எண்.2412/2018/அ1 | |

உண்மை நகல்

(ஒம்) பி.ஏகராஜ்
ஆணையர்மற்றும்தனிஅலுவலர்

நாகப்பட்டினம் நகராட்சி

**2019–ம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ம் நாள் வெள்ளி கிழமை மாலை 4. 00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

<table>
<tr><th>கூட்ட நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம்</th><th>தீர்மான எண்</th></tr>
<tr><td>29–11–2019</td><td>பொருள் எண்.1<br>தமிழ்நாடு அரசாணை நிலை எண்.238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்( வழங்கல் ) துறை (மாந4) நாள்.01–10–1997–ல் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின் படி நாகப்பட்டினம் நகராட்சியில் ஓட்டுநராக பணிபுரிந்து வரும் ஓட்டுநர்களில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்துகளின்றி பணிபுரிந்து வரும் நான்கு ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்றிதழ்கள் வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4980/2018/ஜே 3 நாள்.07–08–2019–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்றிதழ்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு கைவினை தொழிலாளர் மேம்பாட்டு கழகம் சென்னை அவர்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.1.00இலட்சம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்வதற்கும் பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 உத்தேச செலவினத்தொகையினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>3 அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 3478/2016/எச்1</td><td>தீர்மானம் எண். 149<br>அ.கு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29–11–2019</td><td>பொருள் எண்.2<br>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN-51-AB-4197–க்கு நாய்கள் பயணம் செய்யும் வாகனம் ) உள்ள பேட்டரி பழுதடைந்து வாகனம் இயக்க முடியாத நிலை உள்ளதால், மேற்படி வாகனத்திற்கு புதியதாக பேட்டரி வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4300/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம்அனுமதி வழஙகலாம்<br>2 மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அனுமதி வழஙகலாம்<br>ந.க.எண்.2554 /2019/எச்2</td><td>தீர்மானம் எண். 150<br>அ. கு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29–11–2019</td><td>பொருள் எண்.3<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண். TN-51-H-7369-ல் உள்ள பேட்டரி பழுதடைந்து வாகனம் இயக்க முடியாத நிலை உள்ளதால் புதியதான பேட்டரி வாஙக ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.7600/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழஙகலாம்<br>2 மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதி வழஙகலாம்<br>ந.க.எண்.2897 /2019/எச்2</td><td>தீர்மானம் எண்.151<br>அ, கு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29–11–2019</td><td>பொருள் எண்.4<br>நாகப்பட்டினம் நகராட்சியின் உரக்கிடஙகில் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு செயற்கை முறையில் தயார் செய்யப்படுகிறது உரத்திற்கு தேவையான நுண்ணுயிர் திரவம் ( ) தருவத்து கொள்வதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பணியின் அவசர அவசியத்தை கருதி நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>தீர்மானம் எண். 152<br>அ, கு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | அலுவலககுறிப்பு 1 உத்தேச செலவினத்தொகை ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>ந.க.எண். 2907 /2019/எச்1 | |
| 29-11-2019 | பொருள் எண்.5<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகப்பட்டினம் அரசு மருத்துவமனை சாலையில் மருத்துவமனைக்கு தென்புறமாக மேற்படி சாலைக்கு கீழ்புறத்தில் போக்குவரத்திற்கு இடையூற்றுன்றி மருத்துவமனை சாலைக்கு தென்புற சுவரையொட்டி பஙக் ஸ்டால் அமைக்க திரு.பி.பரமசிவம் என்பவர் கோரியுள்ளார். மேற்படி இடத்தினை கட்டிட ஆய்வரால் நேராய்வு செய்யப்பட்டு மேற்படி இடம் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படாத இடமாக இருப்பதால், மேற்படி இடத்தில் 10X10 அளவிலான பஙக் ஸ்டால் அமைக்க அனுமதி வழஙகலாம் என குறிப்பளித்துள்ளார். எனவே நகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டு நகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.2,500/-வீதம் வாடகை நிர்ணயம் செய்தும், மேற்படி இடத்தில் பஙக் ஸ்டால் அமைத்துக்கொள்ள அனுமதி வழஙக மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது,<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழஙகலாம்<br>2 நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு நகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டும் அனுமதி வழஙகலாம்.<br>ந.க.எண். 2887/2019/அ4 | தீர்மானம் எண். 153<br>அ, கு அனுமதிக்கப்பட்டது |
| 29-11-2019 | பொருள் எண்.6<br>இந்நகராட்சியில் அனைத்து பிரிவிற்க்கும் BSNL Broad Band Wifi பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி இணைப்பில் அதிவேக வசதி தேவைப்படுவதால் FTTH (Fiber to the home) நிறுவனதற்க்கும் BSNL நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்துள்ள M/S Nagai Telivition Net Work நிறுவனம் மூலம் Wifi Brad Band பெறுவதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.7000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழஙகலாம்<br>2 மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலம்<br>3 பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிமேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1004 /2019/இ2 | தீர்மானம் எண். 154<br>அ, கு அனுமதிக்கப்பட்டது |
| 29-11-2019 | பொருள் எண்.7<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் புதிய பேருந்து நிலையத்தில் புரதான நகர வளர்ச்சி திட்டம் 2008-2009-நிதியின் கீழ் புதிதாக கட்டப்பட்ட உணவகத்தினை குத்தகைக்கு விடுவதற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 16-06-2009, 01-07-2009, 18-02-2010, 03-03-2010, 18-03-2010, 25-03-2010, 21-04-2019, மற்றும் இன்னும் பிற தினஙகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இதனால் மேற்படி உணவகத்தில் கணிணி வரி வசூல் மையம் அமைத்து வரி வசூல் பணி மேற்கொண்டதில் பொதுமக்கள் கணிணி வரி வசூல் மையத்தை பயன்படுத்தவில்லை. இதனால் மேற்படி உணவகம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படாமல் இருந்து வருகிறது. எனவே மேற்படி உணவக பயன்பாட்டில் உள்ளதை கடை பயன்பாடாக மாற்றம் செய்து பொதுஏலம் கோரவும் மேற்படி கடைக்கு கீழ்கண்டுள்ள விவரப்படி ஏல முன்வைப்புத்தொகை நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது. | தீர்மானம் எண். 155<br>அ, கு அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | | ஏல முன் வைப்புத்தொகை ரூ | சொத்து மதிப்பு அசல் சான்றுதல் கொடுக்கவேண்டிய தொகை ரூ | சொத்து மதிப்பு சான்றுதல் அளிக்காவிட்டால் செலுத்தவேண்டிய கூடுதல் தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | நாகூர் புதிய | 50000 | 100000 | 50000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பேருந்து நிலைய கடையின் உரிமம் | | | |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் ஒப்புதல் வழங்கலாம் |

ந.க.எண். 4370 /2017/அ4

---

29–11–2019

பொருள் எண்.8

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் புதிய பேருந்து நிலையத்தில் புரதான நகர வளர்ச்சி திட்டம் 2008–2009–நிதியின் கீழ் கட்டப்பட்ட உணவகத்தினை குத்தகைக்கு விடுவதற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 16–06–2009, 01–07–2009, 18–02–2010, 03–03–2010, 18–03–2010, 25–03–2010, 21–04–2019, மற்றும் இன்னும் பிற தினங்களில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இதனால் மேற்படி உணவகத்தில் கணிணி வரி வசூல் மையம் அமைத்து வரி வசூல் பணி மேற்கொண்டதில் பொதுமக்கள் கணிணி வரி வசூல் மையத்தை பயன்படுத்தவில்லை. இதனால் மேற்படி உணவகம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படாமல் இருந்து வந்தது. அதனை நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு உணவக பயன்பாடாக இருந்து வந்ததை கடை பயன்பாடாக மாற்றம் செய்து 28–11–2019–அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.டி.செய்யது கதிஜா பீவி – நாகூர் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையாக ரூ.7,500/–(ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) உரிமம் கோரியுள்ளார். மேற்படி உரிமத்தொகையினை ஒப்புக்கொள்ள வருவாய் ஆய்வர் தனது குறிப்பில் ஏலக்கேள்வி தொகை ரூ.7,500/– உள்ளுர் சந்தை மதிப்பை விட கூடுதலாக இருப்பதால் உரிமத்தொகையினை ஏற்கலாம் என தெரிவித்துள்ளார். எனவே உயர்ந்தபட்ச உரிமத்தொகையினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுள்ளது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். 4370/2017/அ4

தீர்மானம் எண். 156
அ, கு
அனுமதிக்கப்பட்டது

---

29–11–2019

பொருள் எண்.9

வடக்கிழக்கு பருவமழை தொடங்கியிருப்பதால் நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதார பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் சிறப்பு தூய்மைப்பணி மேற்கொள்வதற்கும் தேவையான பிளிசிங பவுடர் மற்றும் இதர தளவாடப் பொருட்கள் தருவித்துக்கொள்வதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.4.00 இலட்சத்தில் மதிப்பீட்டில் Sri Saravana Hardwares Kuthalam நிறுவனத்தாரின் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைந்து கொடுக்கப்பட்டுள்ள விலைப்புள்ளியை ஏற்க இந்நகர்மன்றம் தீர்மான எண்.115 நாள் 30–08–2019ல் அனுமதி வழுங்கியதன் பேரில் நாளது தேதி வரை சிறப்பு தூய்மை பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட பிளசிங பவுடர் மற்றும் இதர தளவாட பொருட்கள் மேலும் தேவைப்படுவதால் சம்மந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் Sri Saravana Hardwares நிறுவனத்தார் ஏற்கனவே கொடுக்கப்பட்ட விலை விகிதத்தின் படி பிளிசிங பவுடர் மற்றும் இதர தளவாட பொருட்கள் விநியோகம் செய்ய சம்மதம் தெரிவித்து சம்மத கடிதம் வழுங்கியுள்ளதால் பணியின் அவசர அவசியத்தை கருதி நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழுங்கியதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | உத்தேச செலவின தொகை ரூ.4.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதி வழுங்கலாம். |
| | 2 | பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழுங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் |

ந.க.எண்.2351 /2019/எச்1

தீர்மானம் எண். 157
அ, கு அனுமதிக்கப்பட்டது

---

29–11–2019

பொருள் எண்.10

நாகப்பட்டினம் நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் உள்ளுர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–20ம் ஆண்டிற்கு பணிகள் மேற்கொள்ளமாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.2944/2019/இ6 நாள்.14–10–2019 ல் நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டதன் பேரில்15–11–2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | குறை | அதிக |

தீர்மானம் எண். 158
அ, கு அனுமதிக்கப்பட்டது

| | | | | வு | ம் |
|---|---|---|---|---|---|
| 1 | யாகூசைன் பள்ளி தெரு மழை நீர் வடிகாலில் எப்.ஆர்.சி. மேன்ஹோல் கவர் (FRC Manhole Cover in the Drain ) அமைத்தல் | 5.50/– | திரு.ஆர்..கே .முத்துகிருஷ்ணன் | 0.01 % | –– |
| | | | திரு.வி.சுந்தர்ராமன் | –– | 1.42 % |
| 2 | யாகூசைன் பள்ளி தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.50/– | திரு.ஆர்.கே. முத்துகிருஷ்ணன் | 0.01 | –– |
| | | | திரு.வி.சுந்தர்ராமன் | –– | 0.50 % |

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழஙகலாம் |
| | 2 | வரப் பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் களம் 5ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரா் திரு.ஆர்.கே.முத்துகிருஷ்ணன் என்பவரது ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீட்டு விலையை விட குறைவானதாக உள்ளதை ஏற்கலாம் |
| | 3 | பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்தரவு வழஙகிட நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அஙகீகரிக்கலாம் |

ந.க.எண்.2767/2019/இ1

29–11–2019

பொருள் எண்.11

தீா்மானம் எண். 159
அ, கு அனுமதிக்கப்பட்டது

நாகப்பட்டினம் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் உரக்கிடஙகுகளில் செயற்கை முறையில் தயாரிக்கப்படும் உரத்திற்கு தேவைப்படும் நுண்ணுயிா் திரவம் (EM Solution ) உத்தேச செலவினத்தொகை ரூ.9.00 இலட்சத்தில் மதிப்பீட்டில் தருவித்துக்கொள்வதற்கு பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலா் அவா்களின் அனுமதி பெற்று கடந்த 14–11–2019 தேதி விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படியாக மூன்று விலைப்புள்ளி மட்டும் வரப்பெற்றதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | விலைப்புள்ளிதாரா் பெயா் மற்றும் முகவரி | தளவாடப்பொருள்களின் விவரம் | | | மதிப்பீட்டு விலை விவரம் |
|---|---|---|---|---|---|
| | | பொருட்கள் | Quty | Rs | |
| 1 | Bala Infrastructures No.847 North Main Street, Puthukottai | நுண்ணுயிா் திரவம் (EM Solution) | 1 Ltr | 897 | (–) குறைவு |
| 2 | Visewham Electricals NO.57/5, Surya Flats. Kamarajar Nagar, Choolai Medu, Chennai 600 094 | | 1 Ltr | 980 | (+) அதிகம் |
| 3 | Athithya Traders No.1228, North 4th Street, Puthukottai/ | | 1 Ltr | 1056 | (+) அதிகம் |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளை வரிசை எண்.1ல் கண்டுள்ள Bala Infrastructures Puthukottai நிறுவனத்தாா் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுக்கப்பட்டுள்ள விலைப்புள்ளியை ஏற்க ( GST, EPF மற்றும் IT நீஙகளாக ) பணியின் அவசர அவசியத்தை கருதி நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலா் அவா்களின் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழஙகியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | குறைவான மதிப்பீட்டு விலை விகிதத்தில் நுண்ணுயிா் திரவம் (EM Solution) வழஙகுவதற்கும் Bala Infrastructures Puthukottai நிறுவனத்தாா் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியத்தை கருதி நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலா் அவா்களின் அனுமதிப்பெற்று |

விநியோகம் உத்தரவு வழஙகியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2773/2019/எச்1

---

**29–11–2019**

பொருள் எண்.12

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் என்.TN-51- H-7369 புதியதாக பேட்டரி விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள 28–11–2019–ம் தேதி விலைப்புள்ளி கோரியதில்இரண்டு விலைப்புள்ளிகள்வரப்பெற்றன

| வ.எண் | விலைப்புள்ளிகள் விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | தில்லை எண்டர்பிரைசஸ் வாட்டர் பேஙக் காம்பிளக்ஸ் நாகப்பட்டினம் | 7700 |
| 2 | மஹாஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரி ஒர்க்ஸ் , 916 வடக்கு கோட்டை வாசல் கிழக்கு ரோடு, நாகப்பட்டினம் | 7600 |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் கண்ட மஹாஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரி ஒர்க்ஸ் நாகப்பட்டினம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மஹா ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரி ஒர்க்ஸ் நாகப்பட்டினம் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம் |
|---|---|---|

ந.க.எண்.2897 /2019/எச்2

தீர்மானம் எண். 160

அ, கு அனுமதிக்கப்பட்டது

---

**29–11–2019**

பொருள் எண்.13

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் என்.TN-51- AB-4197 ற்கு புதியதாக பேட்டரி விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள 28–11–2019–ம் தேதி விலைப்புள்ளி கோரியதில்இரண்டு விலைப்புள்ளிகள்வரப்பெற்றன

| வ.எண் | விலைப்புள்ளிகள் விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | மகா ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரி ஒர்க்ஸ் , 916 வடக்கு கோட்டை வாசல் ரோடு, நாகப்பட்டினம் | 4300 |
| 2 | ஆண்டவர் டிராக்டர்ஸ் 12, மருத்துவமனை சாலை, நாகப்பட்டினம் | 4400 |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட மகா ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரி ஒர்க்ஸ் நாகப்பட்டினம் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மகா ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் & பேட்டரி ஒர்க்ஸ் நாகப்பட்டினம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம் |
|---|---|---|

ந.க.எண்.2554/2019/எச்2

தீர்மானம் எண். 161

அ, கு அனுமதிக்கப்பட்டது

---

**29–11–2019**

பொருள் எண்.14

நாகப்பட்டினம் நகராட்சி பகுதியில் சாலையோர வியாபாரிகளுக்கு Bio Matric Card வழஙகிட நகராட்சி நிர்வாக ஆணையரக கூடுதல் இயக்குநர் சென்னை – 5 அவர்களின் கடிதம் ந.க.எண்.31371/2008/UPA2 நாள். 03–06–2016–ல் தெரிவித்துள்ளவாறு Bio Matric Card தயாரித்து வழஙக விலைப்புள்ளி கோரியதில் 29–05–2019–ல் கீழ்கண்ட இரண்டு நிறுவனஙகளிலிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றது.

1. M/S. The Athens Charitable and Education Trust Thiruvannamalai No.1 Card – Rs.345.00
2. M/S. The Annai Trust Thiruvannamalai Rs.370.00

அவசரம் அவசியம் கருதி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் விலை குறைவாக கொடுத்த The Aithan Charitable and Educational Trust திருவண்ணாமலை– க்கு பணி உத்திரவு வழஙகப்பட்டது, இதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடமிருந்து 1091 எண்ணிக்கை Bio Matric Card தயார் செய்து சாலையோர வியாபாரிகளுக்கு Bio Matric Card வழஙகப்பட்டு வருகிறது. 1091 Card- க்கு வழஙகிட மேற்படி நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை வழஙகிட மற்ற அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதிக்கலாம் |
|---|---|---|
| | 2 | மேற்கண்ட தொகை திட்ட நிதியிலிருந்து வழஙகலாம். |

ந.க.எண். 2467/2014/சி2

தீர்மானம் எண். 162

அ, கு அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| 29-11-2019 | பொருள் எண்.15<br>நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் பொது சுகாதாரப்பணியின் கீழ் வடக்கிழக்கு பருவமழை காரணமாக டெங்கு நோய் பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் உரல்கள், டயர்கள், தேஙகாய்மட்டைகள், உடைந்தமண் பாண்டஙகள் மற்றும் முட்டைதோள் போன்றவகளில் தேஙகி நிற்கும் கழிவு நீரால் டெஙகுகொசு புழுக்கள் உருவாக காரணமாக உள்ளதை கண்டறிந்து மருந்துகள் தெளித்தல் புகை மருந்து அடித்தல் டெஙகு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடத்தில் ஏற்படுத்துதல் போன்ற சிறப்பு பணிகளை 80 DBC தினக்கூலி பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.6530/2019/ஈ1 நாள் 27-06-2019 பட்டியலின் படி ஒரு தினக்கூலி பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.310/- வீதம் தினக்கூலி வழஙகிடவும் மேலும் டெஙகு கொசு ஒழிப்பு பணிகளுக்கு தேவையான படிவஙகள் Fogging இயந்திரத்திற்கு தேவையான எரிபொருள் போன்ற உத்தேச செலவினத்தொகை ரூ.95.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. | | | தீர்மானம் எண். 163<br>அ, கு அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழஙகலாம் | |
| | | 2 | பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அஙகீகரிக்கலாம். | |
| | ந.க.எண். 2219 /2016/எச்1 | | | |

உண்மை நகல்

(ஒம்)பி.ஏகராஜ்
ஆணையர்மற்றும்தனிஅலு வலர்